TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051879

1. District மாவட்டம்: DVAC Hqrs. PS காவல்நிலையம்: DVAC Hqrs. Chennai Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 20 Date நாள்: 16.12.20

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 and 12
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 15.12.2020 2145hrs Date to நாள் வரை: 16.12.2020 0230 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.12.2020 Time நேரம் : 03.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.12.2020 Time நேரம் : 04.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் TASMAC Elite Shop No.957, Lower Ground floor, G-16 & G-16A, No.142, Phoenix Mall, Velachery Chennai - 600 042 Approximately 4 Kms South Ea
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.C.K. Kumaran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில்: Deputy Inspection Cell Officer (g) Address : முகவரி Chennai Collectorate Chennai - 600 001.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) R. Dhanasekar, Supervisor, TASMAC Shop No.957, Phoenix Mall Velachery, Chennai - 42.
(2) T. Ravi, Salesman, TASMAC Shop No.957, Phoenix Mall, Velachery, Che
(3) Murugan, District Manager, TASMAC, Chennai South District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Unaccounted cash of Rs.17,180/=
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet is enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Judy Abigail Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS .......................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16.12.2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (S. JUDY ABIGAIL)
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
Special Investigation cell-I
Vigilance & Anti-Corruption
Alandur, Chennai-16.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.20/2020, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 பிரிவுகள் 7 மற்றும் 12 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 12ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான் (S.ஜூடி அபிகெய்ல்) 16.12.2020-ம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.K.குமரன் அவர்கள் அளித்த புகாரின் பேரில் இன்று (16.12.2020) அதிகாலை 03.30 மணியளவில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

திரு.C.K.குமரன் அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு :

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.C.K.குமரன்,<br>வட்டாட்சியர் / மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1. | காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-600016. |

அ1/215/2020, நாள்: 16.12.2020

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-42, வேளச்சேரி, பீனிக்ஸ் மால் (Phoenix Mall), தரைத்தளத்தின் கீழ்தளம் (Lower Ground Floor), G-16 & G-16A, எண். 142ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957ல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை நாள் 15.12.2020 இரவு 9.45 மணிமுதல் 16.12.2020 அதிகாலை 02.30 மணிவரை - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

—

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 15.12.2020 இரவு 9.45 மணி முதல் 16.12.2020 அதிகாலை 02.30 மணிவரை சென்னை-42, வேளச்சேரி, பீனிக்ஸ் மால் (Phoenix Mall), தரைத்தளத்தின் கீழ்தளம் (Lower Ground Floor), G-16 & G-16A, எண். 142ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957ல் மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டு

தணிக்கையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.17,180/-, 15.12.2020ந் தேதி கடை எண்.957ல் ஆவணங்களின்படி விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் விவரங்கள் அடங்கிய 5 தாள்கள் மற்றும் நடவடிக்கையின் செயல்முறை ஆணை மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுத் தணிக்கை செயல் முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- C.K.குமரன்
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-1.

Sir,

Received the complaint and after getting permission, a case in V&AC, HQRS, Cr.No.20/2020 u/s 7 and 12 of Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered on 16.12.2020 at 03.30 hrs. Sd/- S.Judy Abigail, 16/12/2020 Inspector of Police, SIC, V&AC, Chennai-16.

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து (15.12.2020 மற்றும் 16.12.2020) சென்னை-42, வேளச்சேரி, பீனிக்ஸ் மால் (Phoenix Mall), தரைத்தளத்தின் கீழ்தளம் (Lower Ground Floor), G-16 & G-16A, எண். 142ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957ல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

..............................................................................................................................

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1.<br>2. திருமதி.எஸ்.ஜூடி அபிகெய்ல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>3. திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

| | |
|---|---|
| | 4. திரு.என்.ரவிகுமார்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>5. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-42, வேளச்சேரி, பீனிக்ஸ் மால் (Phoenix Mall), தரைத்தளத்தின் கீழ்தளம் (Lower Ground Floor), G-16 & G-16A, எண். 142ல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957ல் விற்பனை செய்யப்படும் மதுபான வகைகளுக்கு அரசு நிர்ணயித்த விலையைக் காட்டிலும் கூடுதலாக விலை வைத்து பணம் வசூலிப்பதாகவும் அதை அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கிட்டு கொள்வதாகவும் கிடைத்த வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957ல் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துறையினர் இணைந்து இன்று (15.12.2020) இரவு 9.45 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) ELITE கடை எண்.957 TITAN eyeplus என்ற கடைக்கு எதிரே கிழக்கு நோக்கி நுழைவாயில் அமைந்துள்ளது. அந்த கடையின் உள்ளே நுழைந்ததும் தெற்கு பக்கத்தில் காணப்பட்ட கேஷ் கவுண்டரில் இரண்டு நபர்கள் மேற்கு நோக்கி நின்று கொண்டு மதுபான வகைகள் விற்றும், வாங்குவதற்கு வந்த நபர்களிடம் இருந்து பணம் மற்றும் Card payment பெற்றுக் கொண்டிருந்தனர். அப்போது அந்த கடையில் சுமார் 12 நபர்கள் ஆங்காங்கே நின்று கொண்டு மதுபான வகைகளை செலக்ட் செய்து கொண்டிருந்தனர். மேற்படி கேஷ் கவுண்டரில் இருந்த நபர்களிடம் தணிக்கை குழு தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். கேஷ் கவுண்டரில் முதலில் நின்று கொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் ரவி என்றும் தான் இந்த கடையில் விற்பனையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.11,000/- இருந்தது. அதன் விவரம் முறையே (Rs.500x22). இந்த பணம் குறித்து கேட்க, அவர் தனது சொந்த பணம் ரூ.1,000/- என்றும் சென்னையிலுள்ள தனது உறவினர் திரு.அருள்மணி என்பவர் திருவண்ணாமலை வேங்கிக்கால் கிராமத்தில் உள்ள திரு.தேவேந்திரன் அவர்களிடம் ரூ.10,000/- கொடுக்கும்படி கொடுத்ததாக தெரிவித்தார். இது தொடர்பாக திரு.அருள்மணி என்பவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்கூறிய குறித்து உண்மைத்தன்மை உறுதிசெய்யப்பட்டது. அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.11,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

3) மேலும் கேஷ் கவுண்டரில் இரண்டாவதாக நின்று கொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் செந்தில்குமார் என்றும் தான் அம்பத்தூர் எஸ்டேட்டிலுள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) கிடங்கில் விற்பனையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். மேலும் அவர் இந்த கடையில் கடந்த ஓராண்டுக்கு முன்புவரை பணிபுரிந்து வந்ததாகவும் தற்போது கடை எண். 712 ஈக்காட்டுத்தாங்கலுக்கு சேல்ஸ்மேனாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இங்கு NOC பெறுவதற்கு வந்ததாக தெரிவித்தார். மேற்படி அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.1,140/- இருந்தது. அதன் விவரம் (Rs.500x2; Rs.100x1; Rs.10x4). இந்த பணம் குறித்து கேட்க, அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.1,140/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

4) மேலும் இக்கடையில் பணிபுரியும் ஊழியர்கள் பற்றிய விவரம் கேட்டபோது கடையின் மேற்பார்வையாளராக குருசாமி, தனசேகர் மற்றும் ஜான் பாக்கியராஜ் ஆகியோர் பணிபுரிவதாகவும், விற்பனையாளர்களாக ரவி, வடிவேல், செந்தில்குமார், ராஜமாணிக்கம், வெள்ளதுரை, ராமநாதன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோர் தங்களுக்குள் ஷிப்ட் முறையில் பணி செய்து வருவதாகவும் இன்றைய தினம் (15.12.2020) ஷிப்ட் முறையில் மேற்பார்வையாளராக திரு.தனசேகர் என்பவரும், விற்பனையாளர்களாக ரவி, ராஜமாணிக்கம் மற்றும் ஏகாம்பரம் ஆகியோர் பணிபுரிகின்றனர். அப்போது கடையின் மேற்பார்வையாளர் திரு.தனசேகர் என்பவரிடம் இன்றைய தினத்தில் கடையில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக பணமாகவும் மற்றும் Card payment மூலம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை விவரங்கள் குறித்து கேட்கப்பட்டது. அப்போது கேஷ் கவுண்டரில் நின்று கொண்டு இருந்த விற்பனையாளர் திரு.ரவி, மேஜையின் டிராயரிலிருந்து மொத்த பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் முழுவதும் எண்ணிப் பார்த்தபோது ரூ.1,39,770/- காணப்பட்டது. அதன் விவரம் முறையே (Rs.2000x13; Rs.500x165; Rs.200x15; Rs.100x165; Rs.50x151; Rs.20x11; Rs.10x400). மேலும் இன்றைய தினத்தில் மதுபானங்கள் விற்பனை தொடர்பாக Card payment மூலம் வசூல் செய்யப்பட்ட பணம் குறித்து கேட்டபோது அவர் ingenico iWL220 என்ற கருவியின் மூலம் பெறப்பட்ட Print out எடுத்து ஆஜர் செய்தார். அதில் இன்றைய தினத்தில் பகல் 12 மணிமுதல் இரவு 10 மணிவரை Card payment மூலம் ரூ.1,82,650/- வசூல் செய்யப்பட்டதாக காணப்பட்டது. மேலும் இன்றைய தினத்தில் மதுபானங்கள் விற்பனை தொடர்பாக Card payment மூலம் வசூல் செய்யப்பட்ட பணம் குறித்து ingenico iWL220 என்ற மற்றொரு கருவியின் மூலம் பெறப்பட்ட Print out எடுத்து ஆஜர் செய்தார். அதில் இன்றைய தினத்தில் Card payment மூலம் ரூ.1,09,910/- வசூல் செய்யப்பட்டதாக காணப்பட்டது. எனவே Card payment மூலம் மொத்த விற்பனை ரூ.2,92,560/- ஆகும். இன்றைய தினம் மதுபான வகைகள் விற்பனை செய்ததில் பணமாகவும் மற்றும் Card payment மூலம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.4,32,330/- ஆகும்.

5) மேலும் மேற்படி கடையில் மற்றொரு விற்பனையாளராக பணிபுரியும் நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ஏகாம்பரம் என்றும் தான் இந்த கடையில் விற்பனையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தன்னுடைய மணிபர்சிலிருந்து தனது சொந்த பணம் என்று கூறி ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.900/- காணப்பட்டது. அதன் விவரம் (Rs.500x1; Rs.200x1; Rs.100x2). அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.900/- அவரிடமே திருப்பி

அளிக்கப்பட்டது. அவர் அருகில் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் ராஜமாணிக்கம் என்றும் தானும் இந்த கடையில் விற்பனையாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தன்னுடைய மணிபர்சிலிருந்து தனது சொந்த பணம் என்று கூறி ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.2,300/- காணப்பட்டது. அதன் விவரம் (Rs.500x4; Rs.100x3). அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.2,300/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

6) மேற்படி கடையின் மேற்பார்வையாளர் திரு.தனசேகர் என்பவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.4,750/- இருந்தது. அதன் விவரம் (Rs.500x7; Rs.200x1; Rs.100x9; Rs.50x1; Rs.20x4; Rs.10x2). இந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது எம்.ஜி.ஆர்.நகரிலுள்ள முத்தூட் பைனான்ஸில் தனது நகைகளை அடமானம் வைத்துள்ளதாகவும், அதற்குண்டான வட்டியை செலுத்துவதற்காக மேற்படி பணத்தை வைத்திருந்ததாக தெரிவித்தின்பேரில் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.4,750/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

7) மேலும் இன்றைய தினத்தில் விற்பனை செய்து பெறப்பட்ட தொகை ரூ.4,15,150/-. ஆனால் மேற்படி கடையின் மதுபானங்கள் விற்பனை செய்ததில் கேஷ் கவுண்டரில் வசூல் செய்யப்பட்ட மொத்தப்பணம் ரூ.4,32,330/- ஆகும் (Cash + Card Payment). கடையின் ஆவணங்களின்படி மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்ட தொகையைவிட கேஷ் கவுண்டரில் கணக்கில் பெறப்பட்டுள்ள தொகை கூடுதலாக ரூ.17,180/- உள்ளது. இது தொடர்பாக மேற்பார்வையாளர் திரு.தனசேகரிடம் கேட்டபோது, அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கூடுதல் விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்வதாகவும், ஆதலால் பணம் ரூ.17,180/- கூடுதலாக கணக்கில் உள்ளதாக மேற்படி கடையின் மேற்பார்வையாளர் திரு.தனசேகர் அவர்கள் தெரிவித்தார். இன்று மதுபானம் வாங்கியவர்களிடம் இருந்து கார்டு மூலம் மதுபான விலையை விட கூடுதல் விலையை வைத்து வசூல் செய்யப்பட்ட பணம் கணக்கில் வங்கியில் இருப்பதாகவும், அந்த கூடுதல் தொகைக்கு சமமான ரொக்கத்தை கேஷ் விற்பனையில் தாங்கள் எடுத்துக் கொள்வதாகவும தெரிவித்தார்.

8) மேலும் இவ்வாறு மதுபான வகைகள் உயரதிகாரிகளின் உத்தரவுப்படி கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது அன்றாடம் நடைமுறையில் உள்ளதாகவும், மேற்படி கடையில் மதுபான வகைகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் வசூலிக்கப்படும் பணத்தில் இந்த கடை சார்பாக ரூ.10,000/-மும் மற்றும் வேளச்சேரியில் இயங்கி வரும் மற்றொரு TASMAC கடை எண்.719ல் மதுபான வகைகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் வசூலிக்கப்படும் பணத்தில் ரூ.4,000/-த்தை கடையின் மேற்பார்வையாளர் திரு.காசிநாதன் என்பவரும், சென்னை தேனாம்பேட்டையில் இயங்கி வரும் TASMAC கடை எண்.894ல் மதுபான வகைகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் வசூலிக்கப்படும் பணத்தில் ரூ.10,000/-த்தை கடையின் மேற்பார்வையாளர் திரு.ஏழுமலை என்பவரும் தன்னிடம் சென்னை தெற்கு மாவட்ட TASMAC மேலாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக அளித்ததாக கூறினார். தான் கடந்த மூன்று மாதங்களாக ரூ.24,000/-த்தை திரு.முருகன், மாவட்ட மேலாளர், TASMAC, சென்னை தெற்கு மாவட்டம் அவர்களின் அறிவுரைப்படி அவரது டிரைவர் திரு.குமரன் மூலம் ஒவ்வொரு மாதமும் மாமூலாக கொடுப்பதாக தெரிவித்தார். லாக் டவுன் காலத்தை தவிர அதற்கு முன்பும் கொடுத்து வந்ததாக தெரிவித்தார்.

9) எனவே மேற்படி கடையின் மதுபானங்கள் விற்பனை செய்ததில் கேஷ் கவுண்டரில் வசூல் செய்யப்பட்ட மொத்தப்பணம் ரூ.4,32,330/- மற்றும் கடையின் ஆவணங்களின்படி விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் மதிப்பு ரூ.4,15,150/- ஆகும். எனவே மதுபானங்களை அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததில் வசூலிக்கப்பட்ட பணம் ரூ.17,180/- (Rs.500x34; Rs.100x1; Rs.50x1; Rs.10x3) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இன்றைய தினத்தில் ஆவணங்களின்படி மேற்படி கடையில் விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் விவரங்கள் அடங்கிய ஆவணத்தை கடையின் மேற்பார்வையாளர் திரு.தனசேகர் அவர்கள் ஆஜர் செய்தார்.

10) இந்த கூட்டுத்தணிக்கையின்போது கணக்கில் வராத கூடுதல் பணம் ரூ.17,180/- மற்றும் மேற்பார்வையாளர் திரு.தனசேகர் அவர்கள் ஆஜர் செய்த இன்றைய தினத்தில் விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களின் விவரங்கள் அடங்கிய ஆவணம் (5 தாள்கள்) ஆகியவை மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் விற்பனைத் தொகை ரூ.1,22,590/- உரிய வங்கி கணக்கில் செலுத்துமாறு அறிவுரை கூறி மேற்பார்வையாளர் திரு.ரா.தனசேகரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது விற்பனை தொடர்பான பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி முடிக்கப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை 15.12.2020 இரவு 9.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இன்று 16.12.2020 நள்ளிரவு 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.C.K.குமரன்,
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை மாவட்டம்,
சென்னை-1.

ஒப்பம்/-திருமதி.சா.ஜீடி அபிகேய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.எஸ்.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.என்.ரவிகுமார்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.ஆர்.தனசேகர்,
மேற்பார்வையாளர்,
கடை எண்.957,
TASMAC, Phoenix Mall,
வேளச்சேரி, சென்னை-42.

ஒப்பம்/-திரு.த.ரவி,
விற்பனையாளர்,
கடை எண்.957,
TASMAC, Phoenix Mall,
வேளச்சேரி, சென்னை-42.

ஒப்பம்/-திரு.ஆ.ஏகாம்பரம்,
விற்பனையாளர்,
கடை எண்.957,
TASMAC, Phoenix Mall,
வேளச்சேரி, சென்னை-42.

திரு.கோ.ராஜமாணிக்கம்,
விற்பனையாளர்,
கடை எண்.957,
TASMAC, Phoenix Mall,
வேளச்சேரி, சென்னை-42.

திரு.ர.செந்தில்குமார்,
விற்பனையாளர்,
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின்
(TASMAC) கிடங்கு,
அம்பத்தூர் எஸ்டேட், சென்னை.

16/12/2020

**INSPECTOR OF POLICE,**
Special Investigation Cell,
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.